யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 06 | சங்கீதம்

பெயர் / சுட்டெண் : ..... திருமதி.வா.கவிதா B.FA, PGDE & திருமதி.ஜெ.வினித்தா NDT (Music)

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

வாழ்க்கையோடு தொடர்புடைய இசை (குழந்தைப் பருவப் பாடல்கள்)

1. குழந்தைப் பருவப் பாடல்களைத் தருக.
2. குழந்தை பிறந்தவுடன் வாழ்த்திப் பாடப்படும் பாடல் எது?
3. குழந்தையை தூங்க வைப்பதற்காக பாடப்படும் பாடல் எது?
4. தாலாட்டுப் பாடலில் அடங்கும் சொற்பிரயோகங்களைத் தருக.
5. தாலாட்டுப் பாடல் பாடப்படும் இராகங்களைத் தருக.

சிறுவர் பாடலை ஆக்கி இசையமைத்து அபிநயத்தல்

1. சிறுவர் பாடல்கள் எவ்வாறு அமைந்திருக்கும்?
2. சிறுவர் பாடலின் இசை எவ்வாறு அமைந்திருக்கும்?
3. நீர் கற்ற சிறுவர் பாடல் ஒன்றினைத் தருக.
4. சிறுவர் பாடல்களை நீர் ஆக்கி அபிநயக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் எவை?
5. நீர் உமக்கு விருப்பமான ஒரு கருப்பொருள் (அம்மா, பாடசாலை, பந்து,கணனி, நிலவு,மழை, பூ)கொண்டு சிறுவர் பாடல் ஒன்றினை ஆக்கி அபிநயத்துக் காட்டுக.

சிறுவர் பாடல் (கண்ணன் புரிந்த லீலை...)

1. கண்ணன் புரிந்த லீலை....என்ற பாடலின் வகை?
2. கண்ணன் புரிந்த லீலை.....என்ற பாடல் அமைந்த இராகம், தாளம், தாளநடை என்பவற்றை முறையே தருக.
3. ஏகதாளத்தின் அங்கம் யாது?
4. ஒரு அங்கத்தை மாத்திரம் எடுத்துக் கொள்ளும் தாளம் யாது?
5. திஸ்ர நடைக்குரிய சொற்கட்டு யாது?
6. கண்ணன் புரிந்த லீலை...என்ற பாடலை இயற்றியவர் யார்?
7. கண்ணன் புரிந்த லீலை...என்ற பாடலில் வரும் அங்கங்கள் யாவை?

பாடசாலைக் கீதம்

1. பாடசாலைக் கீதத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் யாவை?
2. பாடசாலைக் கீதத்தின் இசை, தாளத்தின் தன்மை எவ்வாறு காணப்படும்?
3. பாடசாலைக் கீதம் பாடப்படும் சந்தர்ப்பங்களைத் தருக.
4. பாடசாலைக் கீதம் பாடும் போது நாம் பேண வேண்டியநிலை யாது?
5. உமது பாடசாலைக் கீதம் அமைந்த இராகம், தாளம், இயற்றியவர் என்பவற்றைத் தருக.

www.kcol.lk

தேவாரம் (தோடுடைய செவியன்....)

1. தோடுடைய செவியன்....எனும் தேவாரம் அமைந்த பண் யாது?
2. தோடுடைய செவியன் எனும் தேவாரம் அமைந்த பண்ணிற்குரிய இராகம் யாது?
3. தோடுடைய செவியன் எனும் தேவாரம் அமைந்த தாளம்,தலம் யாது?
4. தோடுடைய செவியன் எனும் தேவாரத்தை அருளியவர் யார்?
5. ரூபக தாளத்தின் அங்கம்?
6. ரூபக தாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கை யாது?
7. ரூபக தாளத்தின் முன்னால் வரும் த்ருதத்தினை நீக்கினால் (0) வரும் தாளம் எது?

ஸ்வரம்

1. ஸ்வரம் என்றால் என்ன?
2. ஸ்வரத்தின் தமிழிசைப் பெயர் யாது?
3. சங்கீதத்திற்கு ஆதாரமான ஸ்வரங்கள் எத்தனை?அவை யாவை?
4. ஸரிகமபதநி என்ற ஏழு ஸ்வரங்களையும் எவ்வாறு அழைப்பர்?
5. ஸரிகமபதநிஸ் என்ற எட்டு ஸ்வரங்களையும் எவ்வாறு அழைப்பர்?
6. ஸரிகமபதநி என்ற ஏழு ஸ்வரங்களில் நடுவில் வரும் ஸ்வரம் எது?
7. ஸ்வரத்திற்குரிய வேறு பெயரைத் தருக.
8. நிஷாதத்தின் தமிழிசைப் பெயர் யாது?
9. கைக்கிளையின் வடமொழிப் பெயர் யாது?
10. ஸப்த ஸ்வரங்களையும் அவற்றின் வடமொழிப் பெயர்களையும், தமிழிசைப் பெயர்களையும் அட்டவணைப்படுத்துக.

ஆரோகண அவரோகணம்

1. ஆரோகணம் என்றால் என்ன?
2. ஆரோகணத்தின் தமிழிசைப் பெயர் யாது?
3. ஆரோகணத்தின் மறுபெயர்களைத் தருக.
4. ஆரோகணத்திற்கு உதாரணம் தருக.
5. அவரோகணம் என்றால் என்ன?
6. அவரோகணத்தின் தமிழிசைப் பெயர் யாது?
7. அவரோகணத்தின் மறுபெயர்களைத் தருக.
8. அவரோகணத்திற்கு உதாரணம் தருக.
9. ஆரோகண அவரோகண வரைபடத்தை வரைக.
10. பின்வரும் ஸ்வரத் தொகுதிகளை ஆரோகணம் அவரோகணம் எனும் தலைப்பில் அட்டவணைப்படுத்துக.
    (நிதபம, கமபத, ஸ்நிதப, ரிகமப, மபதநி, பமகரி, ஸரிகம, மகரிஸ், பதநிஸ், தபமக)

வெசாக்

1. வெசாக் பண்டிகை யாரால் எப்போது கொண்டாடப்படுகின்றது?
2. வெசாக் பண்டிகை கொண்டாட்டப்படுவதற்கான காரணம் யாது?
3. வெசாக் பண்டிகையின் பிரதான நிகழ்வுகளைத் தருக.
4. வெசாக் பண்டிகை மூலம் விருத்தியாகும் நற்பண்புகள் எவை?

ரம்ழான்

1. ரம்ழான் பண்டிகை யாரால் எப்போது கொண்டாடப்படுகின்றது?
2. ரம்ழான் பண்டிகையின் பிரதான நிகழ்வுகளைத் தருக.
3. ரம்ழான் பண்டிகை மூலம் விருத்தியாகும் நற்பண்புகள் எவை?

www.ikedu.lk